திரு. சீ. க. வடிவேலு : தலைவரவர்களே, பழுதடைந்து இருக்கின்ற ஏரிகளின் "வரத்து வாய்க்கால்" வேலைகளைச் செய்வதற்கு குடிமராமத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருப்பதால் நல்ல முறையில் அவை செய்யப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் அந்த வேலைகளுக்கு அதிக நிதி உதவி செய்யவோ அல்லது அரசாங்கமே நேரடியாக மராமத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது இருக்கின்ற சட்டப்படி குடி மராமத்து மூலமாகத் தான் வரத்து வாய்க்கால் வேலைகள் செய்யப்படும். அந்த வேலைகளை பி.டபிள்யூ.டி. மூலம் செய்யலாமா என்ற ஒரு குறிப்பு அரசின் தீவிர ஆய்வில் இருக்கிறது. அதைப்பற்றி விரைவாக ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

New tank at Thoppanpatti

* 607 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals to undertake the construction of a tank across the Aranmanai Odai in Thoppanpatti village in Dindigul; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தினால் 70.75 ஏக்கர் பாசன வசதி பெறுவதோடு 150 ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாற்றப்படும். இதனால் 142 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

Radial bus services

* 608 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the Radial Bus Services to be introduced in Madras City by the Pallavan Transport Corporation during the year 1973?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதெனப் பல்லவன் போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது.